**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 01** **நாள்: 04.01.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு NEET, JEE பயிற்சி வகுப்புகளை துவக்கி வைத்து, உண்டு உறைவிடப்பள்ளிகளில் நவீன வசதிகளுடன் கூடிய படுக்கைகள் (Dormitory) கொண்ட அறைகளை திறந்து வைத்தார்.**

-------

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், சுப்பராயன் தெரு, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (04.01.2018) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் ஸ்பார்க் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் (Spark Integration Program) சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான NEET, JEE பயிற்சி வகுப்புகளை துவக்கி வைத்தார்.

பின்னர், சுப்பராயன் தெரு சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சைதாப்பேட்டை சென்னைப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளிகளில் நவீன வசதிகளுடன் கூடிய 120 படுக்கைகள் (Dormitory) கொண்ட அறைகளை திறந்து வைத்தார்.

சென்னைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க செயல்பாடாக, சுப்பராயன் தெரு சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆண்களுக்கான உண்டு உறைவிடப்பள்ளி, சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பெண்களுக்கான உண்டு உறைவிடப்பள்ளி என இரண்டு உண்டு உறைவிடப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, சென்ற ஆண்டு SPARK PROGRAM என்ற திட்டத்தின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 70 பள்ளிகளில் இருந்து 25 மாணவர்களும், 45 மாணவிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு பள்ளிப்பாடத்திலிருந்து அவர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் வாயிலாக மாணவ, மாணவிகளுடைய ஒட்டுமொத்த அடைவுத்திறன் அதிகரிக்கப்பட்டது.

இக்கல்வியாண்டில் மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் மருத்துவ கல்லூரிகளிலும் சேரும் விதமாக 60 மாணவர்கள் மற்றும் 60 மாணவியர்கள் திறனறிவுத் தேர்வின்

வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இம்மாணவர்களுக்கு **NEET** தேர்வுக்கான பயிற்சியை தமிழ்வழி மற்றும் ஆங்கில வழியில் 40 மாணவர்கள் மற்றும் 40 மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், 20 மாணவர்கள் மற்றும் 20 மாணவிகளுக்கு **JEE MAIN ENGLISH** ஆங்கில வழியில் மட்டும் இரண்டு பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியானது காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கி திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது. காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பாடத்திட்டத்திலும், சனி மற்றும் விடுமுறை நாட்களில் **NEET** மற்றும் **JEE**-க்கு சிறப்புப் பயிற்சியாக **FIITJEE** என்ற புகழ்பெற்ற நிறுவனத்தின் வாயிலாகவும், திங்கள் முதல் வெள்ளி வரை முறைப்படுத்தப்பட்ட அட்டவணையின்படி MASTER ACADEMY என்ற நிறுவனத்தின் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இரண்டு மையங்களையும் கல்வித்துறையில் உள்ள கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர் மற்றும் அனைத்து உதவிக்கல்வி அலுவலர்களும் சுழற்சி முறையில் மாணவர்களுடைய அடைவுத்திறன் மேம்படவும் மற்றும் **NEET, JEE** போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறவும் மேற்பார்வையிடப்படுகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., கல்வி அலுவலர் திருமதி டி.ரஞ்சனி, கூடுதல் கல்வி அலுவலர் திரு.டி.சுப்ரமணியன், மண்டல அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**